(ஆறாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

இல. 8 ]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2009, யூன் 24, புதன்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0030 / ' 09

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு, — (1)

(அ) தேசிய சேமிப்பு வங்கி (தே.சே.வ.) 50 மில்லியன் அமெரிக்க டொலர்களை இந்திய ICICI வங்கியிடமிருந்து கடனாகப் பெற்று அப்பணத்தை அரசாங்கத்துக்கு கடனாகக் கொடுத்துள்ளதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) கடன் பெறுவதிலும் பின்னர் அதனைக் கடனாக வழங்குவதிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியதிகளின் முழு விபரங்களையும்,

(ii) தேசியசேமிப்பு வங்கியின் பணிப்பாளர் சபை இதனை ஒத்த கொடுக்கல் வாங்கல்களில் இதற்கு முன்னர் ஈடுபட்டிருந்ததா என்பதையும்,

(iii) அவ்வாறாயின், அவை யாவை என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளர் சபை —

(i) அத்தகைய கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவதற்கு அதனைக் கட்டுப் படுத்தும் நியதிச் சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அத்தகைய வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவதில் உபாயத்திட்டம் மற்றும் ஏற்படக்கூடிய அபாயம் தொடர்பாக கவனம் செலுத்தியதா என்பதையும்,

(iii) மேலே சொல்லப்பட்ட நடவடிக்கையை மேற்கொள்வதற்கு அரசாங்கத் தினால் அல்லது நிதி, திட்டமிடல் அமைச்சினால் அல்லது திறைசேரி செயலாளரினால் பணிக்கப்பட்டதா என்பதையும் அத்தகைய பணிப்பு களுக்கான காரணத்தையும்,

(iv) மத்திய வங்கியின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளதா என்பதையும்,

(v) குற்றவியல் தண்டனைக் கோவையின் நியதிகளின் பிரகாரம் தண்டிக் கத்தக்க அதிகாரத் துஷ்பிரயோகச் செயலொன்றில் மேற்சொல்லப்பட்ட அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனரா என்பதையும்,

(vi) அதன் பொறுப்புகள் மற்றும் வகைகூறும் பொறுப்பு ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டு விரிவான அபாய மீளாய்வை மேற்கொண்டிருந்ததா என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0099 / ' 09

2.

கௌரவ ஆர்.பி. ஏ.ரணவீர பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டின் அனைத்துப் பாடசாலைகளிலும் பணியாற்றி வருகின்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இவர்கள் மத்தியில் பட்டதாரி ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) பட்டதாரி ஆசிரியர்களில் கலை, வணிக, விஞ்ஞான மற்றும் ஏனைய பட்டதாரிகளின் எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதையும்,

(iv) உயர்தரப் பாடங்களை ஆங்கில மொழிமூலமாகக் கற்பிக்கின்ற அல்லது கற்பிக்கக்கூடிய ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(v) அப்பட்டதாரிகள் மத்தியில் ஆங்கிலத்தைப் பட்டப்படிப்பிற்காக பயின்றுள்ள அல்லது ஆங்கில மொழிமூலமாகப் பட்டத்தைப் பெற்றுள்ளோரின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(vi) இப்பட்டதாரிகள் மத்தியில் கல்விப் பொது தராதரப் பத்திர (உயர்தரம் ) பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் சித்தியடைந்தோரின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) கல்விப் பொது தராதரப் பத்திர (உயர்தரம்) பாடங்களை ஆங்கில மொழிமூலமாகக் கற்பிக்கப் போதியளவு எண்ணிக்கைகொண்ட ஆசிரியர்கள் இல்லையென்பதை அவர் ஏற்றுக்கொள்கிறாரா ?

(இ) இன்றேல், ஏன் ?

0199 / '09

3.

கௌரவ பேமசிறி மானகே,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தங்கல்ல நகரத்திற்கு அருகில் இதிபொக்குணகொட ஊடாக பாதை அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதை அவர் அறிவாரா ?

(ஆ) (i) அந்தப் பாதையை அமைப்பதற்குச் செலவிடப்படும் பணம் எவ்வளவு,

(ii) திக்வெல்ல - தங்கல்ல, திக்வெல்ல, பெலிஅத்த – தங்கல்ல என இரண்டு சாலைகள் இருக்கின்றபோது புதிதாக சாலையொன்றை அமைப்பதன் காரணம் யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா

(இ) அந்தச் சாலைக்காக செலவிடப்படும் பணத்தை அம்பாந்தோட்டை மாவட்டத்தில் வறுமையை ஒழிப்பதற்காகப் பயன்படுத்துவது பயனுறுதி மிக்கதாக இருக்கும் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0312 / ' 09

4.

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி மாவட்டத்தின் ஹபராதுவ பிரதேச செயலகப் பிரிவில் 2000ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரை பயிரிடப்பட்ட வயற் காணிகள் வருடாந்தம் எத்தனை ஏக்கர்களென்பதையும்,

(ii) 2008 ஆம் ஆண்டு அறிக்கையிடப்பட்ட வயற் காணிகளில் பயிரிடப்படாத நிலையில் கைவிடப்பட்டுள்ள வயற் காணிகள் எத்தனை ஏக்கர்களென் பதையும்,

(iii) இப்பிரதேச செயலகப் பிரிவில் 350.00 ரூபா மாணிய விலையில் வருடாந்தம் வழங்கப்பட்ட உரத்தின் அளவு எவ்வளவென்பதையும்,

(iv) இப் பிரதேச செயலகப் பிரிவில் கால்வாய்களையும் அணைக்கட்டுகளையும் புனரமைப்பதற்கு 2004 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரை ஒதுக்கப்பட்ட பணத்தொகை ஒவ்வொரு கருத்திட்டத்திற்கேற்ப வெவ் வேறாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) "நாங்கள் பயிரிடுவோம் - நாட்டை கட்டியெழுப்புவோம்" நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதையடுத்து பயிரிடப்படாமல் கைவிடப்பட்ட நிலையி லிருந்த வயற்காணிகளை பயிரிடுவதற்கு விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக, மேற்படி பிரதேச செயலகப் பிரிவில் கால்வாய்களையும் அணைக்கட்டுக் களையும் புனரமைப்பதற்கு வருடாந்தம் செலவுசெய்யப்பட்டுள்ள பணத் தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) 2004 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரை பயிரடப்படாமல் கைவிடப்பட்ட நிலையிலிருந்த வயற் காணிகளின் சதவீதம் எவ்வள வென்பதையும்,

(iii) அனைத்து வயற்காணிகளையும் பயிரிடுவதற்கு எவ்வளவு காலம் எடுக்கு மென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0376 / ' 09

5.

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மஹிந்த சிந்தனை கொள்கை விஞ்ஞாபனத்தின் 9ஆம் பக்கத்தில் (சிங்கள மொழிமூலம்) முன்மொழியப்பட்டுள்ளவாறு பிறப்பு முதல் 5 வயது வரையிலான பிள்ளைகளுக்கு பால் மா கொள்வனவு செய்வதற்காக மாதாந்தம் 200 ரூபா வீதம் வழங்குவது இது வரை செயற்படுத்தப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது இந்த 200 ரூபா வழங்குதல் செயற்படுத்தப்படும் பிரதேச செயலாளர் பிரிவுகள் யாவை,

(ii) இந்த 200 ரூபா வீதமான தொகை வழங்கப்படும் பிள்ளைகளின் எண்ணிக்கை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0031 / '09

6.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) குருநாகல் மாவட்டத்திலுள்ள தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கையினை அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) குருநாகல் மாவட்டத்தில் 2004 ஆம் ஆண்டு ஏப்பிறல் 01 ஆம் திகதி முதல் இற்றைவரையில் புதிதாக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு திறந்துவைக்கப் பட்ட மதுபான விற்பனை நிலையங்கள், வெளிநாட்டு மதுபான விற்பனை நிலையங்கள், சாராயக் கடைகள், உணவு விடுதிகள் மற்றும் ஹோட்டல்களின் எண்ணிக்கையினையும்,

(ii) அவற்றிலிருந்து 2004 முதல் 2007 ஆம் ஆண்டு வரையிலும் இற்றைவரையும் ஒவ்வொரு வருட முடிவிலும் உள்ளவாறாக கிடைத்த வருமானத்துடன் அவற்றின் பெயர்களை தேர்தல் தொகுதி அடிப்படையில்,

(iii) மேலே (i) இலுள்ள தகவலை 1998 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு வருடமும் திசெம்பர் 31 இல் உள்ளவாறாகவும் குருநாகல் மாவட்டத்திற்கான மொத்த வருமானத்தினையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0109 / ' 09

7.

கௌரவ ஆர்.பி. ஏ.ரணவீர பதிரண,— கலாசார அலுவல்கள், தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச திரைப்படக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்றும் சட்ட உத்தியோகத்தரின் நியமனத் திகதி மற்றும் ஆட்சேர்ப்பு அடிப்படை என்ன என்பதையும்,

(ii) அந்த உத்தியோகத்தரை சேர்ப்பதற்கு, சேவையில் நிரந்தரமாக்குவதற்கு மற்றும் அவரின் சம்பளத்தை தீர்மானிப்பதற்கான பணிப்பாளர் சபை அனுமதி முறையாக வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) அவ்வாறெனின், மேற்கூறிய அனுமதி வழங்கப்பட்டுள்ள பணிப்பாளர் சபை தீர்மானம் அடங்கிய ஆவணங்களை அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்கூறிய உத்தியோகத்தர் குறிப்பிட்ட கூட்டுத்தாபனத்துக்கும் குறிப்பிட்ட அமைச்சுக்கும் சமர்ப்பித்துள்ள சுய விபரங்கள் அடங்கிய தகவல்கள் முரண்பாடுகளைக் கொண்ட பொய்யானவையா என்பதையும்,

(ii) அந்த உத்தியோகத்தரின் சம்பளம் மற்றும் கொடுப்பனவு எவ்வளவு என்பதையும்,

(iii) அதற்காக பணிப்பாளர் சபை அனுமதி வழங்கியுள்ளதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) மேற்கூறிய விடயம் தொடர்பாக மோசடிகள் இடம் பெற்றிருப்பின் அது தொடர்பாக எடுக்கும் நடவடிக்கை என்ன என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0200 / '09

8.

கௌரவ பேமசிறி மானகே,— வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் 2008 சனவரி முதல் இற்றைவரை மேற்கொண்ட வெளிநாட்டு விஜயங்களின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) சம்பந்தப்பட்ட அமைச்சர் விஜயம் செய்த நாடுகள் யாவை,

(iii) அதற்காகச் செலவிடப்பட்டுள்ள பணம் எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0353 / '09

9.

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— மீள் குடியமர்த்துகை, அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கா/நாகொட பிரதேச செயலாளர் பிரிவில் பாதுகாப்பற்ற இடங்களில் குடியிருந்தவர்களின் வீடுகள் 2003 ஆம் ஆண்டு வெள்ளப் பெருக்கினால் அழிந்துவிட்டன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இவர்களில் எத்தனைபேருக்கு தல்கஸ்வல தோட்டத்தில் காணிகள் வழங்கப்பட்டுள்ளன,

(ii) இவ்வாறு நட்டஈடு வழங்கப்படவுள்ளவர்களுக்குச் செலுத்தப்படவுள்ள நிலுவை நட்டஈட்டுத் தொகை எவ்வளவு,

(iii) இவர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொள்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட நிலுவை நட்டஈட்டுத் தொகை எவ்வளவு காலத்துக்குள் வழங்கப்படும்

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) மேற் குறிப்பட்ட இடங்களில் வீடுகள் இருந்து அவை அழிந்து போனாலும் , அங்கீகரிக்கப்பட்ட காணிகள் கிடைக்காமையால் பாதுகாப்பற்ற இடங்களில் தமது வீடுகளை மீண்டும் அமைத்துக் கொண்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்குக் கூறுவாரா?

(ஈ) இவர்களுக்கு நட்டஈடு செலுத்தா உடன்படிக்கையின் கீழ் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அனர்த்தத்தின்போது நட்டஈடு செலுத்த முடியும் என்பதை நாகொட பிரதேச செயலாளர் சம்பந்தப்பட்ட பாராளுமன்ற ஆலோசனை குழுவுக்கு அறிவித்துள்ளார் என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(உ) ஆமெனில் எதிர்கால அனர்த்தத்தின்போதன்றி, 2003ஆம் ஆண்டில் வீடுகள் அழிந்து போனதால் நட்டஈடு செலுத்த அங்கீகரிக்கப்பட்டிருப்பினும் மேற்குறிப்பிட்ட பாதுகாப்பற்ற இடங்களிலேயே வீடுகளை அமைத்துக் கொண்டிருக்கின்றவர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட நிலுவை நட்டஈட்டுப் பணத்தை எவ்வளவு காலத்துக்குள் வழங்குவாரென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஊ) இன்றேல், ஏன்?

0377 / ' 09

10.

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பபு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மஹிந்த சிந்தனை கொள்கைப் பிரகடனத்தின் 08ஆம் பக்கத்தில் (சிங்கள மொழிமூலம்) பிரேரிக்கப்பட்டுள்ளவகையில், தமது போசாக்குத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடியாதுள்ள கர்ப்பிணித் தாய்மார்களுக்குப் போசாக்குப் பொதியொன்றை இலவசமாக வழங்குதல் தற்போது நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) தற்பொழுது அப்போசாக்குப் பொதிகளை வழங்குவதை நடைமுறைப் படுத்தியுள்ள பிரதேச செயலகப் பிரிவுகள் யாவை,

(ii) அதன் பிரகாரம் போசாக்குப்பொதி வழங்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை யாது,

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0033 / ' 09

11.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேசத்தைக் கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சமுர்த்தி நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்கான நிபந்தனையும்,

(ii) 1995 தொடக்கம் இன்று வரை சமுர்த்தி நன்மை பெற்றுக் கொண்டிருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கையை ஆண்டு அடிப்படையிலும்,

(iii) அந்தக் காலப்பகுதியில் சமுர்த்திப் பயனாளிகளுக்கு கொடுக்கப்பட்ட நிதி விடுவிப்புகள் மற்றும் அதன் நூற்றுவீதம் எவ்வளவு என்பதையும்,

(iv) 2005 இற்குப் பின்னர் கொடுப்பனவில் அதிகரிப்பு வழங்கப்பட்டதா என்பதையும்,

(v) அவ்வாறாயின், அது வழங்னப்பட்ட திகதியையும் தொகையையும்

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) 2004 ஐ அடிப்படை ஆண்டாகக் கொண்டு, 2004 தொடக்கம் 2008 வரை ஒவ்வொரு மாவட்டத்திலும் கொழும்பு மாவட்டத்திற்குரியதாக -

(i) சமுர்த்திப் பயனாளிகள் பெற்றுக் கொண்ட தொகையின் ரூபா பெறுமானம் எவ்வளவு என்பதையும்,

(ii) ஒவ்வொரு வருடத்திற்குமான பணவீக்கம் எவ்வளவு என்பதையும்,

(iii) ஒவ்வொரு வருடத்திற்குமான பணவீக்கத்தை பணச்சுருக்கம் செய்த பின்னர் நிலவிய உண்மையான கொள்வனவுச் சக்தியையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0201 / '09

12.

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2008 ஆம் ஆண்டில் கடற்றொழில் துறைமுகங்கள் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளனவா என்பதையும்,

(ii) ஆமெனில் , அவ்விடங்களும், அத்திகளும் யாவையென்பதையும்,

(iii) அடிக்கல் நாட்டப்பட்ட இடங்களில் அமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்,

(iv) ஆமெனில், அது எவ்விடத்தில் என்பதையும்,

(v) மேற்படி அமைப்புப் பணிகள் எப்போது ஆரம்பிக்கப்பட்டதென்பதையும்,

(vi) மேற்படி அமைப்புப் பணிகளின் தற்போதைய முன்னேற்றம் எவ்வாறானதென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0354 / ' 09

13.

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2000 ஆம் ஆண்டு முதல் 2008 டிசெம்பர் வரை இலங்கையின் வருடாந்த தேயிலை உற்பத்தி மற்றும் அவற்றில் ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவு நாடுகள் ரீதியாக எத்தனை கிலோ என்பதையும் ,

(ii) தேயிலை ஏற்றுமதியினால் எமது நாட்டுக்குக் கிடைக்கப்பெற்ற வருமானம் எவ்வளவென்பதையும்

அவர் தனித் தனியாக இச்சபையில் சமர்ப்பிப்பாரா ?

(ஆ) (i) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவு மற்றும் நாடுகள் யாவையென்பதை வெவ்வேறாகவும் ,

(ii) தேயிலை இறக்குமதிக்காக வருடாந்தம் செலவிடப்பட்ட மொத்தத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா ?

(இ) வேறு நாடுகளிலிருந்து நமது நாட்டுத் தேயிலைக்கு கட்டளை அனுப்புகின்ற போது மேற்படி கட்டளையாலர்கள் வேறு நாட்டுத் தேயிலைக்காகவும் (உதா: அசாம் தேயிலை ) கட்டளை அனுப்புவதாக சம்பந்தப்பட்ட ஆலோசனைக் குழுக் கூட்டத்தின் போது உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளார்களென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா ?

(ஈ) அவ்வாறு கட்டளைகள் அனுப்பப்பட்ட வெளிநாட்டுத் தேயிலையின் அளவு மற்றும் தேயிலையின் ரகம் சம்பந்தப்பட்ட நாடுகள் ரீதியாக யாவையென்பதை அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா ?

(உ) மேற்படி கட்டளைகளின் பிரதிகளை அவர் இசசபையில் சமர்ப்பிப்பாரா ?

(ஊ) இலங்கையில் மிகச்சிறந்த தேயிலை உற்பத்தி செய்யப்படுகின்ற போது தேயிலையை இறக்குமதி செய்து இலங்கை தேயிலையுடன் கலந்து ஏற்றுமதி செய்வதன் மூலம் எமது தேயிலை ஏற்றுமதிக்கு பெரும் தீங்கு ஏற்படக்கூடும் என்பதால் தேயிலை இறக்குமதி செய்வதை நிறுத்துவதற்கு அவர் துரித நடவடிக்கையெடுப்பாரா?

(எ) இன்றேல், ஏன் ?

0378 / ' 09

14.

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) நெதர்லாந்து அரசாங்கத்தினால் இலங்கைக்கு வழங்கப்படுகின்ற அனைத்து உதவிகளும் முற்றிலும் நிறுதத்தப்பட்டுளளதாக அந்நாட்டு அமைச்சரொருவர் நெதர்லாந்து பாராளுமன்றத்தில் குறிப்பிட்டுள்ளாரென்பதைஅவர் அறிவாரா ?

(ஆ) மேற்படி உதவிகளை நிறுத்துவதற்கான காரணம், இலங்கைக்குள் இடம்பெறுகின்ற மனித உரிமை மீறல்கள், சிவில் மக்களின் மரணங்கள் மற்றும் சட்டத்தின் உன்னதத் தன்மையை களங்கப்படுத்தல் என மேற்படி கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா ?

(இ) நெதர்லாந்து அரசாங்கத்துடன் மீண்டும் நல்லுறவை ஏற்படுத்திக்கொள்வதற்கு வெளிநாட்டலுவல்கள் அமைச்சு எடுத்துள்ள நடவடிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா ?

(ஈ) இன்றேல், ஏன் ?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— கரையோரக் காவல் திணைக்களம்,— கரையோரக் காவல் திணைக்களமொன்றைத் தாபிப்பதற்கும், கரையோரக் காவல் திணைக்களத்தின் பணிகளைக் குறித்துரைப்பதற்கும் ஏற்பாடு செய்வதற்கும்;அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

## பிரேரணை முன்னறிவித்தல்

2.

கௌரவ லலித் திஸாநாயக்க,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"ரோஹித அபேகுணவர்தன மன்றத்தைக்
கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

வீதி அபிவிருத்தி அதிகாரசபை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*2.

பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரி சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*3.

கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 149, நிகழ்ச்சித்திட்டம் 2 ,— † 2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் இருநூறு மில்லியன் (ரூபா 200,000,000) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலவு செய்யப்படலாம்:-

அட்டவணை

| | | | |
|---|---|---|---|
| தலைப்பு 149 | — | கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு | ரூபா |
| நிகழ்ச்சித்திட்டம் 2 | — | அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆக்கப்பொருட் செலவினம் ரூ. | 200,000,000 |
| | | ரூ. | **200,000,000** |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

† 2009, ஜூன் மாதம் 12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2009 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 ஆம் 2 ஆம் மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா. 2,749,830,000.

*4.

போக்குவரத்து அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 114, நிகழ்ச்சித்திட்டம் 2 ,— † 2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் இரண்டாயிரத்து இருநூற்று தொன்னூற்றியொன்பது மில்லியன் எட்டு இலட்சத்து முப்பதினாயிரம் (ரூபா 2,299.83.மில்லியன்) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு செலவு செய்யப்படலாம்:-

அட்டவணை

தலைப்பு : 114 — போக்குவரத்து அமைச்சு ரூபா

நிகழ்ச்சித்திட்டம் : 2 — அபிவிருத்தி நடவடிக்கைகள்

மீண்டுவரும் செலவினம் ரூ. 2,299.83 மில்லியன்

ரூ. **2,293.83 மில்லியன்**

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

† 2009, ஜூன் மாதம் 12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2009 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 இன் குறைநிரப்பும் மதிப்பீட்டின் மொத்தம் ரூபா. 450,000,000.

*5.

ஊழியர் சகாய நிதிய (விசேட ஏற்பாடுகள்) (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*6.

இந்தியக் குடிவரவு தொழிலாளர் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*7.

சொத்துக்களால் ஆதாரப்படுத்தப்பட்ட பிணைப் பொறுப்பளித்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*8.

பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*9.

காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*10.

தவணை தவறிய வரிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*11.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*12.

இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*13.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*14.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*15.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம்— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*16.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*17.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*18.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*19.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*20.

குடியியல் வான்செலவு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*21.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— 06/2006 ஆம் இலக்கமும் 2006.04.25 ஆம் திகதியும் கொண்ட பொது நிர்வாக சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்கான மாதாந்த சம்பளங்கள் பின்வருமாறு அமைய வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ.70,000.00 |
| | ரூ. 1,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகளும் மேன்முறையீட்டு | |
| நீதிமன்றத்தின் தலைவரும் | ரூ. 65,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 63,500.00 |

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றப்பட்ட சம்பளத்திட்டங்களுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இந்தப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*22.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— *அரசியலமைப்பின் கீழான தீர்மானம்* (இல.2),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்காக, சம்பளத்தின் 25% இற்குச்சமமான மாதாந்த ஆள்சார் படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய ஆள்சார் படிகளாக பாராளுமன்றத்தினால் 1998 மாச்சு மாதம் 17 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஆள்சார் படிகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளு மன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*23.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— *அரசியலமைப்பின் கீழான தீர்மானம்* (இல.3),— மேலும், 2007.08.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசரும் உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவருக்கும் மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகளுக்கும் கீழ்க்காணுமாறு மாதாந்த வீட்டு வாடகைப் படிகள் செலுத்தப்பட வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் இப்பாராளுமன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ. 27,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிபதிகளின் தலைவர் | ரூ. 25,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 22,500.00 |

மேலும், உயர் நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதி களுக்குச் செலுத்தப்பட வேண்டிய வீட்டு வாடகைப் படியாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட படிக்குப் பதிலாக, இப் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட வீட்டு வாடகைப் படி நடைமுறைப் படுத்தப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*24.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— *அரசியலமைப்பின் கீழான தீர்மானம்* (இல.4),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, பிரதம நீதியரசருக்கு உபசரணைப் படியாக மாதாந்தம் ரூ. 3,500 படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும் இதற்கு முன்னர் பிரதம நீதியரசருக்காக பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட உபசரணைப் படிக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப் படும் உபசரணைப் படி நடைமுறைப்படுத்தப்படவேண்டுமென இப்பாராளுமன்றத்தி னால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*25.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*26.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007, ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

*27.

சுகாதார நலத்துறை, போசணை அமைச்சர்,— மருத்துவ கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— இலங்கை மருத்துவப் பேரவையுடனான கலந்தாலோசனையுடன் (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 பெப்ரவரி மாதம் 25 ஆந் திகதிய 1590 / 13 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.04.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

28.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

29.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

30.

பலாத்காரமாக மதம் மாற்றுவதைத் தடைசெய்தல் சட்டமூலம் — பரிசீலனை.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] “சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.